2017 ஜனவரி 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்குதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டாரே. (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர், என்ன சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்திலிருந்து 25 பேர் கேரள மாநிலத்திற்கு சுற்றுப்பயணம் சென்றார்கள். சுற்றுப்பயணம் சென்ற இடத்தில் ** எனவே, தமிழகத்தில் ** என்று சொல்லப்படுகின்ற வதந்தி தவறானது. கேரள மாநிலத்திற்கு 25 பேர் கொண்ட குழு சுற்றுப்பயணம் சென்றது. அந்தக் குழுவிலே இடம்பெற்றவர்கள்தான் அந்த இருவரும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். அதுவே போதுமானது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், பொறுங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பறவைக் காய்ச்சல் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய சந்தேகமான வினாக்களுக்கு உரிய முறையில் முழுமையான விசாரணை செய்யப்பட்டு, அறிக்கை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2017 ஜனவரி 30

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? (குறுக்கீடு) எதிர்க்கிறீர்களா? (குறுக்கீடு) சொல்லுங்கள், record செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகவும் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

2017 ஜனவரி 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*